ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1996/52 - 2016 දෙසැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2016.12.09

*1996/52 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

**மதுவரி அறிவித்தல் இல. 991**

*காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில், 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதிய, 1232/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 844 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலிலுள்ள 26, 27 மற்றும் 39 ஆம் பிரிவுகள், பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2016, திசெம்பர் 09.*

**வடிசாலைகள்/சாராய உற்பத்தி களஞ்சியசாலைகள் தொடர்பான விதிகள்**

*2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதிய, 1232/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 844 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல் இதன் மூலம் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.*

I. *26 ஆம் பிரிவு முழுமையக நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் :-*

*"26 இருப்பில் இருக்கும் குறைபாட்டிற்காக களஞ்சியசாலை இயக்குநர் அல்லது மது வடிப்போரினால் காட்டப்படும் கணக்கு- மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் காலத்திற்குக் காலம் விதிப்பனவு செய்வதற்கு முடியுமான கால இடைவெளிக்கு அமைய, அல்லது எச்சந்தர்ப்பத்திலும் அல்லது வழி நடாத்தப்படும் அத்தகைய வீதத்தில் ; மது வடிப்போர் களஞ்சியசாலை இயக்குநரிடம் உள்ள பௌதீக கையிருப்பின் கணக்கு ஒன்று எடுக்கப்படும். விரயத்தின் நிமித்தம் நாட்காட்டி ஆண்டு ஒன்றிற்கு 0.1 நூறு சதவீதத்திற்கு மேற்படாத அளவு தொடர்பாக திருப்திகரமான விளக்கம் இல்லாத போது அல்லது அதற்காக மது வடிப்போர் அல்லது களஞ்சியசாலை இயக்குநர், மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு திருப்தி தரும் வகையில் நியாயம் கூற முடியாத போது அவர்கள் மதுசாரத்தின் அளவிற்கேற்ப அப்போது நடைமுறையில் இருக்கும் வரி விகிதத்திற்கு ஏற்ப அரசாங்கத்திற்கு மதுவரி செலுத்துவர். மேலே கூறப்பட்ட வரியை செலுத்துவதன் நோக்கத்திற்கான விபரம் பரிசோதனை இடும் நேரத்தில் விகிதாசார அடிப்படையில் கணிக்கப்படும்."*

II. *27 ஆம் பிரிவு முழுமையாக நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலம்,*

*"27 தவிர்க்க முடியாத காரணத்திற்காக வரி விலக்களித்தல் - விரயமானது எழுமாற்றாக அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணத்தினால் உண்டாக்கப்பட்டது என மதுவரி ஆணையாளர் நாயகம் அல்லது அவரால் நியமிக்கப்படுகின்ற அலுவலர் ஒருவரினால் திருப்தியுறும் வகையில் நிரூபிக்கப்பட்டிருப்பின், அத்தகைய குறைபாடு மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பரிந்துரையின் பேரில் திறைசேரி செயலாளரின் பரிந்துரையின் பேரில் கைவிடப்படலாம். அனுமதிக்கப்படுகின்ற உச்ச விரயம் 0.1 நூற்று சதவீத்திற்கு மேற்படாத அளவு மட்டுமே ஆகும்."*

III. *39 ஆம் பிரிவு முழுமையாக நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலம்,*

*"39 சிந்துதல், ஆவியாக்கல், அடைத்தல் அல்லது மாற்றுதலால் உண்டான இழப்பிற்கான கொடுப்பனவு -*

(i) *ஏற்றுமதி இறக்குமதிக்காக பிணை ஒன்றின் கீழ் உள்ளூரில் இடமாற்றம் செய்யப்பட்ட மதுசாரத்தின் ஆவியாக்கம் அல்லது சிந்துதல் அல்லது மாற்றுதலில் ஏற்பட்ட இழப்பிற்கு அல்லது அரசாங்கத்தின் நோக்கங்களிற்காக வரியின்றி வழங்கப்பட்ட மதுசாரத்திற்கோ, ஏதாவது காலத்தில் போக்குவரத்தில் ஏற்பட்ட வீதத்திற்காக ஆகக் கூடியது 0.05 நூற்று சதவீத்திற்கு கழிவு வழங்கப்படும். ஏற்புடைய விரயத்தைக் கணிக்கும் போது வழங்கிய தினம் மாற்றுவதற்காக உண்மையாக செலவளிக்கப்பட்ட காலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தினம் ஆகியவற்றைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.*

(ii) *பிணையின் கீழ் அல்லது வரியின்றி மதுசாரத்தை இடமாற்றம் செய்தபின், அவை வந்து சேருமிடத்து அங்குள்ள உத்தியோகத்தர் அளவிடப்பட்டு நிரூபிக்கப்பட்டு மேலே குறிப்பிட்ட அளவிற்கு விரயமாகியுள்ளது என்பதை காட்டும் இடத்து களஞ்சிய இயக்குநர் அல்லது மதுவடிப்போர் மேற்படி உள்ள தொகைக்கு கூடுதலாக அதிகமான குறைபாடு என்ற வகையில் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள விகிதப்படி வரி செலுத்துதல் வேண்டும். விரயமானது எழுமாற்றாக அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணதினால் உண்டாக்கப்பட்டது என மதுவரி ஆணையாளர் நாயகம் அல்லது அவரால் நியமிக்கப்படுகின்ற அலுவலர் ஒருவரினால் திருப்தியுறும் வகையில் நிரூபிக்கப்பட்டிருப்பின், அத்தகைய குறைபாடு மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பரிந்துரையின் பேரில் திறைசேரி செயலாளரின் பரிந்துரையின் பேரில் கைவிடப்படலாம். அனுமதிக்கப்படுகின்ற உச்ச விரயம் ஆயினும் எவ்வாறாயினும் 0.05 நூற்று சதவீத்திற்கு மேற்படாத அளவு மட்டுமே ஆகும்.*

(iii) *இவ்விதியின் கீழுள்ள கொடுப்பனவு, வடிசாலை/களஞ்சியசாலையில் இருந்து அனுப்பப்பட்ட மதுசாரத்தின் அளவில் இருந்து வந்து சேருமிடத்திலிருந்து பெறப்பட்ட அளவைக் கழிப்பதன் மூலம் தீர்மானிக்கப்படும்."*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*